# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 36/2016

**08.07.2025. அ.சா. 14 நாகராஜன் த.பெ. சுப்பிரமணி**

**A1 to 5 and 7 present.**

**எதிரிகள் தரப்பில் குவிமுச. 311 மனு அனுமதிக்கப்பட்டு அ.சா. 14 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

இந்த வழக்கில் மரு. ராஜகுரு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தததாக உள்ள து என்றால் சரிதான். மரு. ராஜகுருவின் வாக்குமூலத்தில் பரசுராமன் என்பவரை யார் சிகிச்சைக்கு அழைத்து வந்தார்கள் என்று இல்லை என்று சொன்னால் சரிதான். பரசுராமனை தான் பரிசோதனை செய்தபோது பரசுராமன் மயங்கிய நிலையில் இருந்ததாக தனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட ஆயுதங்களால் பல்வேறு நபர்களால் தாக்கப்படும்போது பல்வேறு காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் தலையில் 5x2x1 செ.மீ அளவிலான ஒரே ஒரு வெட்டு காயம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சான்றிதழை பார்த்தால் அது என்ன காயம் என்று புரியவில்லை என்று சாட்சி குறிப்பிடுகிறார். புகாரில் சொல்லப்பட்ட நிலம் சம்மந்தமான முன்விரோதம் பற்றி நான் விசாரித்தேன். ஆனால் அது சம்மந்தமாக தனிப்பட்ட யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றை நான் காவல் நிலையத்திலேயே தயாரித்தேன் என்றும், நான் சொல்வதுபோல் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 07.01.2015 தேதியிட்ட கைப்பற்றுதல் மகசரில் கண்ட சொத்துக்களை நான் வழக்கின் புகார்தாரரிடம் வாங்கி தயார் செய்தேன் என்றால் சரியல்ல. இறந்த பரசுராமனுக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயம் அவராகவே கூர்மையான பலகை கல்லில் விழுந்ததால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளால் நீதிமன்றத்தில் உள்ள ஆயுதங்களால் தாக்கப்பட்டிருந்தால் பரசுராமனுக்கு பல்வேறு இடங்களில் பல்வேறு காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. இறந்த பரசுராமனுக்கு பிரேத பரிசோதனை செய்த மரு. நாகேந்திரகுமார் என்பவரை

நான்தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . நான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ள அரிவாளை மருத்துவரிடம் காட்டி கருத்து பெற்றேனா என்றால் இல்லை. இறந்த பரசுராமனுக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயம் அவராகவே கூர்மையான பலகை கல்லில் விழுந்ததால் ஏற்பட்டது என்றும், அதனால்தான் அவர் இறந்தார் என்றால் சரியல்ல . தவறான புகாரின் அடிப்படையில் முறையாக விசாரணை செய்யாமல் பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல்அறிக்கையின் அடிப்படையில் எதிரிகள் பெயரில் தவறுதலான குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு எத்தனை மணி நேரத்திற்கு முன் என்று கருத்து வழங்கவில்லை என்றால் சரிதான் . இறந்துபோன பரசுராமனுக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் நான் தவறாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் தாக்கப்பட்ட இடம் பற்றி சொல்லியுள்ள இடத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஏற்கனவே எழுதிய எழுத்துக்கள் மீது எழுதப்பட்டுள்ளது. இவ்வழக்கு எதிரிகள் மீது ஜோடிக்கப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல . இறுதி அறிக்கையில் சொன்னவாறு எந்த குற்ற செயல்களிலும் எதிரிகள் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.